குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 31–2013

அ.சா. **1**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. நவீண்குமார் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு. ராமச்சந்திரன் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 38 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873–ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 05.03.2026**

**(1 முதல் 8 எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை :**

நான் பேரிகையில் குடியிருந்து ஒப்பந்ததாராக பணிப்புரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு நடைப்பெற்ற விநாயகர் ஜெயந்தி விழாவின் போது VHP தலைமையில் பேரிகை பிராமணர் தெருவில் வைக்கப்பட்டு இருந்த விநாயகர் சிலையை

கறைப்பதற்காக போராமல் குட்டை என்ற இடத்திற்கு ஊர்வலமாக நாங்கள் சுமார் 50 நபர்கள் எடுத்து சென்ற போது பேரிகை செக்போஸ்ட் அருகே உள்ள மசூதி வழியாக சென்ற போது மதிய நேரத்தில் அங்கிருந்த சுமார் 8 நபர்கள் மசூதி வழியாக விநாயகர் சிலையை எடுத்துக்கொண்டு வரக்கூடாது என எங்களை பார்த்து சொல்லி சண்டை போட்டு எங்கள் மீது கற்களை வீசி தகராறு செய்தார்கள் கூட்டத்தில் இருந்தவர்கள் செருப்பை விநாயகர் சிலை மீது விசினார்கள் மற்றும் எங்களிடம் பிரச்சனை செய்த அந்த 8 நபர்களை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும் ஆஜர் எதிரிகள்தான் எங்களிடம் பிரச்சனை செய்த நபர்கள். பிரச்சனை செய்யததால் சாமி சிலையை அங்கே நிறுத்தி விட்டோம் அப்போது ஜோராக மழை வந்ததால் நாங்கள் சாமி சிலையை எடுத்துச்சென்று கரைத்துவிட்டோம். அதன்பிறகு நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார்தான் நான் கொடுத்த புகார். புகார் மனு **அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு குறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியுமா என்றால் படிக்க தெரியும் எழுத தெரியாது. புகார் மனுவை யார் எழுதியது என்றால் எங்கள் ஊரை சேர்ந்த வினோத் குமார் என்பவர் எழுதினார் நான் சொன்ன விசயங்களை அவர் எழுதினார். போலிசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் தேதி எனக்கு ஞாபகம் இல்லை. விநாயகர் சிலையை எந்தெந்த வழியாக எடுத்து செல்ல வேண்டும் என காவல் துறையில் அனுமதி பெற வேண்டும் என்றால் சரிதான். நாங்கள் விநாயகர் சிலையை ஊர்வலமாக

எடுத்து செல்ல காவல் துறையிடம் பெற்ற அனுமதி சான்றை புகார் மனுவுடன் இணைத்து காவல் நிலையத்தில் கொடுத்தேனா என்றால் இல்லை. பொதுவாக விநாயகர் சிலையை ஊர் வலமாக எடுத்துசென்றால் காவல் துறையின் பாதுகாப்புடன் எடுத்து செல்வோம் என்றால் சரிதான். சம்பவத்தன்று எங்களுடம் காவல் துறையினர் பாதுகாப்பு வந்து இருந்தார்களா என்றால் வந்தார்கள் சுமார் 10 காவல் அதிகாரிகள் வந்தார்கள். அன்றைய தினம் எங்களுடன் பாதுகாப்பு வந்த உதவி ஆய்வாளர் பெயர் சுமித்ரா. 27.09.2012ம் தேதி 17.30 மணிக்கு நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்திற்கு அன்றைய தினம் 23.00 மணி அளவில் தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். எனக்கு தமிழ் எழுத தெரியாது என்றும் நான் சொல்லி இன்னார் புகாரை எழுதினார் என போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்தேனா என்றால் இல்லை.

நான் கொடுத்த புகார் மனுவில் சம்பவத்தை யார் யார் பார்த்தார்கள் என்று குறிப்பிட்டு புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. புகார் கொடுத்த பிறகு உதவி ஆய்வாளர் என்னை சம்பவயிடத்திற்கு அழைத்து சென்று என்னை விசாரித்தார்களா என்றால் 2, 3 நாட்கள் கழித்து போலிஸ் என்னை சம்பவயிடம் அழைத்து சென்று விசாரித்தார்கள். சாமி சிலை மீது விசப்பட்ட செருப்புகளை போலிசார் சம்பவயிடத்தில் இருந்து கைப்பற்றினார்களா என்றால் எனக்கு தெரியாது. சாமி மீது வீசப்பட்ட செருப்புகள் என நான் போலிசாரிடம் எந்த செருப்பையும் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். பொதுவாக மசூதி முன்பு போகும் போது அமைதியாக இருக்க வேண்டும் என்பது முஸ்லிம் மதத்தின் கோட்பாடு என்றால் எனக்கு தெரியாது. நாங்கள் எத்தனை நபர்கள் ஊர் வலமாக சென்றோம் என்றால் சுமார் 50 நபர்கள் அனைவருக்கும் சுமார் 25

வயதிற்குள் தான் இருக்கும். நாங்கள் ஊர் வலமாக செல்லும் போது மேலதளம் வைத்தோமா என்றால் வைத்தோம் மேலம் அடிப்பவர்கள் சுமார் 50 நபர்கள் வந்தார்கள். சம்பவம் நடைப்பெற்றதாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 17.30 மணி என்பது முஸ்லிம்களின் தொழுகை நேரம் என்றால் எனக்கு தெரியாது. எங்களுடன் மத தலைவர் என யாராவது வந்தார்களா என்றால் சம்பவத்தின் போது வரவில்லை. இந்த வழக்கு சம்பவ சமயத்தில் எதிர் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் எதிரி இல்லை என்றாலும் என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றாலும் சரிதான்.

அந்த வழக்கு சம்பவயிடத்தில் இருந்த நபர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கு என்றால் சம்பவயிடத்தில் இருந்த 3 நபர்கள் மீதும்மற்றும் சம்பவயிடத்தில் இல்லாத நபர்களின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் புகார் கொடுத்பதற்கு முன்பே எதிர் தரப்பினர் எங்கள் மீது புகார் கொடுத்தார்கள் என்றால் தெரியாது. சம்பவ சமயத்தில் நான் சூளகிரி VHP ஒன்றிய தலைவர். அரசு தரப்பு சாட்சி பட்டியலில் கண்ட 2 முதல் 10 நபர்கள் VHP பொறுப்பில் எதுவும் இல்லை. பட்டியல் சாட்சி 2 முதல் 10 ஆகியோர் சம்பவத்தின் போது உடன் இல்லை என்றால் பட்டியல் சாட்சி 2 வெங்கடேஷ் எங்களுடன் சம்பவத்தின் போது இருந்தார். மற்றவர்கள் சம்பவத்தின் போது உடன் இருக்கவில்லை சம்பவத்திற்கு பிறகு மாலை 7.00 மணிக்கு அவர்கள் வந்தார்கள். நான் முதல் விசாரணையில் சொன்னப்படி எந்த சம்பவமும் நடைப்பெறவில்லை என்றாலும் எங்களை சேர்ந்த நபர்கள் தான் மசூதி அருகே பிரச்சனை செய்தார்கள் என்றாலும் அது சம்பந்தமாக அவர்கள் புகார் கொடுத்த பிறகு அந்த புகாரில் பெயர் குறிப்பிடப்படாத நான் இந்த வழக்கில் புகார்

கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. புகார் மனுவில் சொல்லி உள்ளவாறு எந்த சம்பவமும் நடைப்பெறவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஒம். /−ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 ஓசூர்.**